55. விதியும் மதியும்

நாங்கள் ஆறு பேர்வழிகள் சேர்ந்து தினமும் மாலையில் 'வாக்' போவது வழக்கம். மழை, வெய்யில், காற்று, தூசு எதுவும் எங்களுக்கு லட்சியமில்லை. எங்கள் பேச்சு சுவாரஸ்யத்தில் நாங்கள் சுற்றுப்புறத்தைக்கூட அவ்வளவாகக் கவனிக்கிற வழக்கமில்லை. தற்போதைய பெரியமனிதன் பத்திரிகையில் விடுத்திருக்கும் அறிக்கையில் ஆரம்பித்து நித்தியமான தத்துவங்கள் வரையில் பேச்சு நடக்கும். ஆரம்பக் கல்வி முதல் ரயில்வே லயனுக்கப்பாலிருக்கும் சர்வகலாசாலையின் நித்தியமான 'உள்நாட்டுக் கலகங்கள்' வரையில் எங்கள் பேச்சு வெகு சுவாரஸ்யமாய்ப் போய்த் திரும்பும். தினந்தினம் இந்த மாதிரி எல்லா விஷயங்களையும் பற்றிப் பேசுவதனால் பேச்சில் எங்கள் ஈடுபாடு குறைவதில்லை. எங்களுக்கு என்றும் அதில் அசட்டையோ அலுப்போ பிறந்ததில்லை. அதற்கு மாறாக என்றாவது ஒருநாள் மாலை அந்தக் கோஷ்டி எக்காரணத்தாலாவது சேராது போய்விட்டால்தான் எங்களுக்கு என்னவோபோல் இருக்கும்.

நாங்கள் வெவ்வேறு வழிகளில், வெவ்வேறு திருஷ்டிகளுடனும் நோக்கங்களுடனும் வாழ்க்கை நடத்துபவார்கள். ஒருவர் வக்கீல். ஆனால் வக்கீல் அல்லாதபொழுதெல்லாம் அவர் ஒரு இலட்சியவாதி. அவர் பெயர் பொன்னம்பலம் இரண்டாவது நண்பர் பி.ஏ. படித்து விட்டுப் பலநாள் ஊரூராக வேலை தேடித்திரிந்து கிடைக்காததால் மனமுடைந்துவிடாமல் வேலையிலிருப்பவர்களை, முக்கியமாக சர்க்கார் உத்தியோகஸ்தர்களைத் தூஷணைசெய்து கொண்டிருப்பவர். தன்னுடைய சொற்ப நிலபுலங்களை வைத்துக் கொண்டு, மானமாக ஆனால் எப்போதும் பிறரைப்பற்றி ஏதாவது வம்பளந்து கொண்டே காலங்கழிக்கும் பிரக்ருதி அவர். அவருக்கு வாழ்க்கையிலே முக்கியமாகப் பிறருடைய வாழ்க்கையிலே இருந்த ஆர்வமும் உத்ஸாகமும் சொல்லிமுடியாது. அவர் பெயர் ராஜகோபாலன். மூன்றாவது நண்பரின் பெயர் சுவாமிநாதன். அவர் ஒரு நவீன வேதாந்தி; அறிவிலே நம்பிக்கை வைத்தவர்; அந்த நம்பிக்கை

வீணாகிவிடப் போகிறதே என்று சதா ஏங்குபவர். சமஸ்கிருத பாஷையில் தத்துவார்த்தமாயும் கூடார்த்தமாயும் உள்ளதை எல்லாம் படித்துவிட்டு வேதாந்தத்திலும், புராணங்களிலும், நமது பண்டைய இலக்கியங்களிலும், நியூட்டனையும், அயின்ஸ்டீனையும், மேல்நாட்டில் நடப்பதாகச் சொல்லப்படும் விஞ்ஞான ஆராய்ச்சி முடிவுகளையும் கண்டுபிடித்து ஆறுதலடைந்து கொண்டிருப்பவர். ஆனால் அவருடைய தினசரி வாழ்க்கைக்கும் மேல்நாட்டு விஞ்ஞான முடிவுகளுக்கும் நம்நாட்டு வேதாந்தத்துக்கும் எவ்வித உறவு பாத்தியதையும் கிடையாது. அவர் தாலுகா ஆபீஸில் குமாஸ்தா. எங்கள் கோஷ்டியில் நாலாவது மனிதர் மாஜி மளிகைக்கடை முதலாளி. அவர் மளிகைக் கடை வைத்து மூணு நாலு வருஷங்களில் வந்த லாபத்தைச் சுருட்டிக்கொண்டு, நஷ்டம் வரும்போலிருந்த சமயம் பார்த்து, கடையை யாரோ ஏமாந்தவன் தலையில் கட்டிவிட்டு 'ரிடையரா'கிவிட்டவர். தற்சமயம் அவருடைய தொழில் சமூக சேவை என்ற லட்சியத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதுதான். அவருக்கு ஒரு சமயம் ருஷ்யாவும், வேறு ஒரு சமயம் பண்டைய பாரதநாடும், பின்னுமோர் சமயம் வெள்ளையர்களின் வாசஸ்தலமும்தான் லட்சியபூமியாகக் காட்சியளித்து வந்தன. அவர் பெயர் ராமசாமி. இந்தக் கோஷ்டியில் ஐந்தாவது பேர்வழி நான்தான். என்னைப் பற்றி நானே சொல்லிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. அது விரஸமாகவேயிருக்க லாமெனினும் மற்றவர்களைப் பற்றிச் சொன்ன பாணியிலேயே என்னையும் பற்றிச் சொல்லிக் கொள்ளாமல் இருப்பது பட்சபாதகமான செய்கையாகிவிடும். அதனால் சொல்லியே விடுகிறேன். நான் எதிலும் நம்பிக்கை வைக்காத ஒரு விசித்திரப் பிரக்ருதி. தெய்வத்தினிடம் எனக்கு நம்பிக்கை கிடையாது; மனிதனிடம் நம்பிக்கையோ அதைவிடக் குறைவுதான். என்னை நான் பெருமையாக இலக்கியாசிரியன் என்று சொல்லிக் கொள்வது வழக்கம். ஆனால் தற்சமயம் பத்திரிகைகளுக்கெழுதிக் கொண்டு காலங்கடத்தும் ஜீவன்.

அன்று மாலை நாங்கள் ஐந்து பேர்வழிகள்தான் 'வாக்' போனோம். எங்களுடன் வழக்கமாக வரும் ஆறாவது பேர்வழி ஆஸ்பத்திரியில் கிடந்தார். டாக்டர்கள் சொன்னதிலிருந்து அவர் பிழைப்பாரா என்பது சற்று சந்தேகமான விஷயம் போலத்தான் தோன்றிற்று. டாக்டர்களையும் மீறிப் பிழைத்தால்தான் உண்டு. நாங்கள் ஐந்துபேரும் தனித்தனியாக வெவ்வேறு சமயங்களில்

ஆஸ்பத்திரிக்குப் போய் அன்று அவரைப் பார்த்துவிட்டு வந்திருந்தோம். எங்களுக்கும் அவர் பிழைப்பார் என்ற நம்பிக்கை இல்லை. இடுப்புக்குமேல் உச்சந்தலைவரையில் மருந்தைத் தடவி பஞ்சை வைத்துக் கட்டுக் கட்டிப் படுக்கையில் கிடத்தியிருக்கிறார்கள். கழுத்து, வாய், மூக்கு, நெற்றி ஒன்றுமே உருவாகத் தெரியவில்லை. அவ்ருடைய கண்கள் மட்டும் சுரத்தாலும் வேதனையாலும் ஏற்பட்ட ஒரு அசாதாரணமான பளபளப்புடன் திறந்து தெரிந்தன. நாங்கள் ஒவ்வொருவராக அவரைப் போய்ப் பார்த்தபோது அவரும் எங்களைப் போலவே நாலைந்து வருஷங்களாக இன்றியமையாத பழக்கமாகிவிட்ட எங்கள் மாலை 'வாக்'கைப் பற்றித்தான் எண்ணியிருப்பார்-அதாவது அப்போது எதையாவது பற்றிச் சிந்திக்க அவருக்குச் சக்தியிருந்தால் அது பற்றித்தான் சிந்தித்திருப்பார் என்பது நிச்சயம்.

அன்று மாலை வழக்கத்துக்கு விரோதமாகச் சற்று நேரங்கழித்தே நாங்கள் ஐவரும் 'வாக்' கிளம்பினோம். நாங்கள் நகரை விட்டு வெளியேறும் ரஸ்தாவில் திரும்பும்போது இருட்ட ஆரம்பித்து விட்டது. பிறைச் சந்திரனும், இரண்டொரு நட்சத்திரங்களும் வானத்து ஆழ்ந்த நீலத்திலே மிதந்து கொண்டிருந்தன. அண்ணாந்து மேலே பார்த்துவிட்டுக் கண்ணைப் பூமிக்குத் திருப்பும்போது உலகமே அதிகமாக இருண்டிருப்பது போல் இருந்தது. எங்களிடையே அன்று பேச்சு வழக்கம்போல சுவாரசியமாகவோ, உத்ஸாகமாகவோ கிளம்பவில்லை. ஏதோ பேசத்தான் பேசினோம். ஆனால் பேசிய வார்த்தைகளுக்கு ஊடே, மேலே, பேசாத ஆனால் ஒவ்வொருவர் மனதிலும் இருந்த வார்த்தைகள் ஒலிப்பது போல் இருந்தது. எங்கள் ஞாபகமெல்லாம் ஆஸ்பத்திரியில் கிடந்த அந்த ஆறாவது நபரின் மேல்தான் என்று சொல்ல வேண்டியதில்லை. சற்று நீண்ட, ஆழ்ந்த மௌனத்துக்குப் பின் திடீரென்று எங்களில் ஒருவர் பேச ஆரம்பிப்பார்-ஆறாவது பேர்வழியும் எங்களுடன் இருப்பது போலவே பாவித்துப் பேசிவிடுவார் உடனே ஞாபகம் வந்துவிடும்-அவர் ஆஸ்பத்திரியில் கிடந்தார். இனிமேல் என்றாவது எங்களுடன் உலாவிப் பேச எழுந்து வருவாரா என்பது சந்தேகந்தான். மறதி என்றல்ல. பழக்க தோஷம் அது. நானே இரண்டொருதரம் அவர் எங்களுடன்தான் வருகிறார் என்ற ஞாபகத்தில் அவரைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டு ஏதோ சொல்ல வாயெடுத்தேன். நல்ல வேளையாக சமயத்தில் பேச்சை அடக்கிக்கொண்டேன். மற்றவர்களும் என் நிலையிலேதான் இருந்தார்கள் என்பதை என்னால்

ஊஹித்துக்கொள்ள முடிந்தது.

திடீரென்று பொன்னம்பலம் சொன்னார். "ஐந்து மணிக்குள் திரும்பி வழக்கம்போல் நம்முடன் 'வாக்' வரலாம் என்றுதான் நேற்று சீனுவாஸனும் உத்தேசித்திருந்தாராம்... ஹூம்.. அவர் இன்று ஆஸ்பத்திரியில் கிடக்கிறார்."

முதல்நாள் நடந்தது இதுதான். நாலைந்து பேர்வழிகள் ஒரு காரியமுமில்லாமல் ஒரு 'டாக்ஸி' வாடகைக்கு அமர்த்திக் கொண்டு எங்கள் ஊரிலிருந்து இருபது மைல்களுக்கப்பாலிருக்கும் கிராமத்தின் புராதன பாழடைந்த கோயிலைப் பார்ப்பதற்காகக் கிளம்பினார்கள். மத்தியானம் சாப்பிட்டுவிட்டு ஒரு மணி சுமாருக்குக் கிளம்பினார்கள். அஸ்தமிப்பதற்குள் திரும்பி விடுவதாக அவர்கள் உத்தேசம். ஆனால் அஸ்தமிப்பதற்கு வெகுநேரம் முன்னரே, கிளம்பி இரண்டு மணிநேரமாவதற்கு முன், போகும் வழியிலேயே அவர்களுடைய 'டாக்ஸி' வண்டி கவிழ்ந்து விட்டது. எங்களுடைய ஊர்போன்ற சின்ன நகரங்களில் சாதாரணமாகக் கிடைக்கும் வாடகை மோட்டார்களைவிட நல்ல மோட்டார்தான் அவர்களுடைய 'டாக்ஸி'; புதுவண்டி; வழக்கத்துக்கு விரோதமாகவே நல்ல வண்டி; பிரேக்குகளிலோ, வேறு எதிலோ அதிகமாகக் கோளாறில்லை. அப்படி இருந்தும் வண்டி ரஸ்தாவில் கவிழ்ந்துவிட்டது. பத்திரிகைத் தலைப்புகளில் போடுவார்களே அது போல 'ஒரு கோரமான' விபத்து! ஒருவர் கோயில் பார்க்கக் கிளம்பியவர், நேரே கடவுளைத் தரிசிக்கச் சென்றுவிட்டார். இரண்டு பேருக்கு நல்ல அடி. இந்த இருவரில் எங்கள் நண்பரும் ஒருவர். இருவரும் ஆஸ்பத்திரியில் ஆச்சுப் போச்சென்று கிடந்தார்கள். வண்டியோட்டியவனுக்கும், அவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த இன்னொருவனுக்கும் உடம்பில் சில கீறல் சிராய்ப்புகளைத் தவிர வேறு எவ்வித ஹானியுமில்லை.

அவர்களுக்கு ரத்தக் காயம் என்றுகூடச் சொல்லக் கூடியதாக ஒன்றும் கிடையாது. இத்தனை ரகளையிலும் அவர்கள் இருவரும் அப்படித் தப்பிவிட்டது எங்களுக்கு ரொம்பவும் ஆச்சரியமாக இருந்தது. பின் ஸீட்டில் இருந்தவர் ஏற்கெனவே சொன்னபடி அந்த இடத்திலே இறந்துவிட்டார். அவர் முகங்கூடத் தெரியாமல் நசுங்கிப் போய்விட்டதாம். அவரும் எங்களுக்குச் சுமாராகத் தெரிந்தவர் எனினும் பார்க்கப் போகவில்லை. அவர் எமன் கையில் மட்டுமின்றி போலீஸார் கையிலும் அகப்பட்டுக் கொண்டவரல்லவா?

எப்படி அந்த விபத்து நேர்ந்தது; அதற்குக் காரணம் என்ன என்பதுபற்றி ஊரில் பலமாக வதந்திகள் உலாவிக் கொண்டிருந்தன. பொதுவாக மேற்கத்தி நாகரீகத்தையும், மோட்டார் யமனையும் வைதவர்கள் பலர். ரெயில், மோட்டார், ஏரோப்ளேன் எல்லாம் அப்போது அழிக்கும் ஆற்றல் பெற்ற 'சிவ'கணங்களாக மக்களுக்குத் தோன்றின. ஒரு சிலர் வண்டி ஓட்டியவன் அஜாக்ரதையாக ஓட்டினான் என்றும், அந்த ரஸ்தாவில் அவன் போன வேகம் போயிருக்கக்கூடாது என்றும், வண்டி ஓட்டிதான் கொலையாளி என்றும் சொன்னார்கள். (சில நாட்களுக்கெல்லாம் வண்டியிலோ, வண்டி ஓட்டியவன் பேரிலோ எவ்விதக் குற்றமும் இல்லை என்று போலீஸும் சட்டமும் பலவிதமான காரணங்களைக் கொண்டு முடிவு கட்டி விடுவார்கள் என்று எங்களுக்கோ மற்றவர்களுக்கோ அப்போது எப்படித் தெரிய முடியும்?) வேறு சிலர் டிரைவர் பக்கத்தில் உட்கார்ந்திருந்து சிறிதும் காயமேயில்லாமல் தப்பிவிட்ட நபர் மேல்தான் குற்றமென்று சாதித்தார்கள். அவர் டிரைவர் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு வேகமாக வண்டியை ஓட்ட அவனைத் தூண்டியதால்தான் இந்த விபத்து நேர்ந்தது என்றார்கள். அவருக்கு ஏற்கெனவே உள்ள பட்டங்கள் போதாதென்று பொது ஜனத்தில் ஒரு பகுதி அவருக்குக் கொலைகாரன் என்ற பட்டமும் தந்து விடவேணும் என்று துடியாத் துடித்தார்கள். இப்படி இலவசமாகக் கொலைகாரப் பட்டம் பெறவிருந்தவர் ஊரில் கொஞ்சம் 'சப்தம் செய்யும் பேர்வழி' கட்சி பிரதிகட்சிகளிலெல்லாம் ஈடுபட்டவர். பொது விஷயங்களில் அவருக்குப் பலத்த அக்கறை, சுயநலத்துக்காக என்று சொல்லிக் கொண்டார்கள். ஊரில் பலருக்கு அவரை எப்போதுமே பிடிக்காது. இதை எல்லாம் ஞாபகத்தில் வைத்துக் கொண்டு கவனிக்கும்போது அவர் இந்தக் கொலைகாரப் பதவிக்குச் சற்றும் உரிமையில்லாதவர் என்றே தோன்றும்.

பொன்னம்பலம் சொன்னார். "அவரைக் கொலையாளி என்று சொன்னால், அவர் மட்டும் சொல்ப காயங்கள்கூட இல்லாமல் தப்பிவிட்டது எப்படி? கடவுள் என்றும், தர்மம் என்றும், ஒரு தத்துவம் உலகில் ஆட்சி செலுத்துவது உண்மையானால் இதை நியாயம் என்று சொல்லமுடியாதே!"

"தர்மம், நியாயம், கடவுள் என்பதையெல்லாம் மீறியது ஒன்றுண்டு, அதுதான் விதி," என்றார் சுவாமிநாதன்.

"விதியாவது சதியாவது, ஐயா! எல்லாம் பிதற்றல்!" என்றார் ராஜகோபாலன். "முன்ஸீட்டில் உட்கார்ந்திருந்தவரும் டிரைவரும் விபத்து வருவதற்குள் ஒரு வினாடி முன் உணர்ந்து கெட்டிக்காரத் தனமாக எகிறிக் குதித்துத் தப்பிவிட்டார்கள். அந்த உணர்ச்சியோ, காரியமோ ஒரு வினாடி தப்பியிருந்தால் அவர்களும் 'குளோஸ்'தான்".

"அந்த வினாடியில் மற்றவர்களுக்குப் பிறக்காத 'விபத்து' என்ற உணர்ச்சி பிறந்ததையும், அவர்கள் எகிறிக் குதிக்கும் காரியம் செய்யத் தூண்டப்பட்டதையுமேதான் விதி என்றேன்," என்று விளக்கினார் சுவாமிநாதன்.

விதி என்று அதைச் சொல்லக் காரணம் என்ன? அது அவர்களுடைய நுட்ப மதியே தவிர வேறு அல்ல என்று எனக்குத் தோன்றுகிறது.

"விதியா மதியா என்று அவர்கள் அச்சமயம் யோசிக்கத் தாமதித்திருப்பார்களா?" என்று இடையில் நான் ஒரு கேள்வி கேட்டேன்.

"பிரச்னைக்குப் புறம்பான விஷயங்களை இழுத்துவிடுவதில் நீர் சாமர்த்தியசாலிதான், ஐயா!" என்றார் மாஜி மளிகைக்கடை ஆசாமி.

"எனக்கு அடுத்த வீட்டில் இருக்கும் காசுக்கடை முருகப்ப செட்டியாரும் அன்று அதே வண்டியில் அவர்களுடன் அந்தக் கோயிலைப் பார்க்கப் போவதாக இருந்தார். ஆனால் கடைசி நிமிஷத்தில் கிளம்ப முடியாமல் போய்விட்டதாம்."

"நானும் கேள்விப்பட்டேன். பன்னிரண்டு மணி ரெயிலில் அவர் மாப்பிள்ளை அகஸ்மாத்தாக வந்து விட்டார். இல்லாவிட்டால் செட்டியாரும் அவர்களுடன் நேற்றுப் போயிருப்பார்."

"அவர் போயிருந்தால் என்ன ஆகியிருக்குமோ?" என்றேன் நான்.

"அதெல்லாம் செட்டியாரின் விதிப்படி நடந்தது. நடக்கும் என்று சுவாமிநாதன் சுலபமாகச் சொல்லிவிடுவார்," என்று சொல்லி ராஜகோபாலன் சிரித்தார்.

சுவாமிநாதன் இந்த ஏளனத்தைச் சஹித்துக் கொண்டிருப்பதாக

இல்லை. "சந்தேகமென்ன, அவர் மாப்பிள்ளை வந்ததும், அவர் போகாதிருந்ததும் விதிப்படி நடந்த காரியந்தான். அப்படி அவர் போயிருந்தாலும் அவர் உயிருடன் தப்பியிருப்பார் என்றுதான் நான் சொல்லுவேன்," என்றார்.

இதற்குள் நாங்கள் வழக்கமாக உட்காரும் வாய்க்கால் மதகை அடைந்துவிட்டோம். மதகில் படிந்திருந்த தூசியைத் தட்டிவிட்டு துண்டைப் போட்டுக்கொண்டு அதன்மேல் உட்கார்ந்தோம். எங்கள் ஐவருக்கும் மதகில் இடம் இருந்தது.

"அப்பா! என்ன சூடு சுடுகிறது!" என்றார் ராமசாமி, எங்கள் சிந்தனைகளின் போக்கைத் திருப்பும் பொருட்டு.

சிறிதுநேரம் எல்லாரும் மௌனமாகவே உட்கார்ந்திருந்தோம். பிறகு பொன்னம்பலம் சொன்னார். "நேற்று காசுக் கடை செட்டியாருக்கும் ஒரு விபத்து நேரத்தான் நேர்ந்தது. சின்ன அல்ப விபத்துத்தான். மூணு மூணரை மணியிருக்கும். தாத்தாவுக்குத் தேள் கொட்டி விட்டதென்று அவருடைய பேத்தி வந்து என்னிடம் தேள் கடி மருந்து வாங்கிக்கொண்டு போனாள்."

"கேட்டீயா ஐயா! உங்கள் கட்சி தோற்றுவிட்டதே!" என்று ராஜகோபாலன் எக்களித்தார்.

"எப்படி?"

"செட்டியாரும் 'டாக்ஸி'யில் போயிருந்தாரானால் அவருக்கு வேறு என்ன விபத்து வேணுமானாலும் நேர்ந்திருக்கலாம். தேள் மட்டும் கொட்டியிராது."

"ஓஹோ! சரிதான். உம்முடைய வாதத்துக்கு இரண்டு விதமாகப் பதில் சொல்லலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. ஒன்று சுலபம், செட்டியாரைத் தேள் கொட்டவேணும் என்று விதித்திருந்த படியால்தான் அவர் டாக்ஸியில் போகவில்லை என்று சொல்லிவிடலாம்..."

"போயிருந்தாரானால் என்பதுதானே கேள்வி."

"இருமையா, வறேன். நீர் என்ன நினைக்கிறீர்? டாக்ஸியில் சாதாரணமாகத் தேள் இருப்பது துர்லபம் என்று எண்ணுகிறீர். தேள் கொட்டு என்று செட்டியாருக்கு விதித்திருக்கும் பக்ஷத்தில், அவர்

அரண்மனையிலிருந்தாலும் சரி, எலெக்ட்ரிக் லிப்டில் இருந்தாலும் சரி, டாக்ஸியிலிருந்தாலும் சரி, பரீட்சித்து ராஜனைப் பாம்பு தேடி வந்ததுபோல, தேளும் அவரைத் தேடியே வரும் என்பதில் சந்தேக மில்லை" என்றார் சுவாமிநாதன்.

"எலெக்ட்ரிக் லிப்டில் இருந்தாலும் சரி, டாக்ஸியிலிருந் தாலும், ராஜசபையிலிருந்தாலும் தேள் என்றால்...."

"வேண்டாமே ஐயா, வேண்டாமே! செட்டியார் டாக்ஸியில் சவாரி செய்கிறார். அதேபோல அவர் வீட்டுத் தேளும் அவர் அங்கவஸ்திரத்தின்மேல் ஜாம்ஜாம் என்று சவாரி செய்து கொண்டு வந்து சரியான சமயத்தில் போட்டுவிடும்."

"போமையா! உம்மோடு பேசிப் பயனில்லை, ஐயா. போம்!" என்று ராஜகோபாலன் கசந்துகொண்டார்.

நான் சொன்னேன். "யாரோடு பேசித்தான் என்ன பயன் ராஜகோபால்? போது போகும். அவ்வளவுதான். ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் இது விஷயமாக மேல்நாட்டறிஞர் ஒருவர் எழுதியிருப்பது எனக்கு ஞாபகம் வருகிறது. தன் புஸ்தகத்துக்கே அவர் 'விதியும் மதியும்' என்று பெயரிட்டிருக்கிறார்."

"ஆசிரியரின் பெயரையும்தான் சொல்லிவிடுமே," என்றார் சுவாமிநாதன்.

"மாரிஸ் மேடர் லிங்க் என்று ஒரு பெல்ஜிய ஆசிரியர். அவர் தன் கண்முன் நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்லி ஆராய்ந்து அதிலிருந்து ஏதாவது முடிவுகள் காணமுடியுமா என்று அலசிப் பார்த்திருக்கிறார். ஸ்விட்சர்லாந்து என்ற மலைப்பிரதேசத்தில் முப்பது முப்பத்தைந்து பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு செங்குத்தான மலைச் சரிவிலே ஒரு பஸ் போய்க்கொண்டிருந்ததாம். ஏதோ காரணத்தால் திடீரென்று பஸ் டிரைவரின் கைக்கு அடங்கவில்லை. பிரேக்குகள் பிடிக்கவில்லை. திருப்பங்கள் நிறைந்த அந்தச் செங்குத்தான பாதையில் பஸ் எந்த நிமிஷம் எங்கு மோதி உடையும் என்றோ, எங்கே மலைச்சரிவில் கவிழ்ந்து விடும் என்றோ சொல்ல முடியாது என்றும் பஸ்ஸில் பிரயாணிகள் எல்லோரும் சாகத் தயாராக இருக்கவேண்டும் என்றும் டிரைவர் சொல்லிவிட்டான். பஸ்ஸில் இருந்தவர்களுக்கும் சாவு நிச்சயமென்று தோன்றிற்று. ஐயாயிரம் அடிகளுக்குக் கீழே பள்ளத்தாக்கில் விழுந்தால் பஸ்ஸில்

ஒரு ஆணி உருவாக அகப்படாது. மனிதர்களின் எலும்புகளில் ஒன்றும் அகப்படாது. கடைசி ஓர 'ஸீட்டில்' கையில் இளங் குழந்தையுடன் உட்கார்ந்திருந்த ஒரு இளந்தாய், தான் இறப்பது நிச்சயம். தன் குழந்தையாவது பிழைக்குமே என்று ஆசைப்பட்டு பாதையிலே பசும்புல் அடர்ந்திருந்த ஒரு பகுதியில் தன் குழந்தையை அன்புடன் போட்டுவிட்டாள். இதெல்லாம் ஒரு வினாடியின் சிந்தனைகள், செய்கைகள்." இதைச் சொல்லிவிட்டு நான் மௌனம் சாதித்தேன்.

"அப்புறம்?" என்றார் சுவாமிநாதன்.

"அப்புறமா? தெய்வாதினமாக ஒரு வினாடிக்கெல்லாம் பஸ் ஒரு சிறு பாறாங்கல்லில் மோதி அதை முட்டுக்கட்டையாகக் கொண்டு சட்டென்று நின்றுவிட்டதாம். பஸ்ஸில் இருந்தவர்கள் எல்லாரும் பிழைத்துவிட்டார்கள்."

"வெளியே எறியப்பட்ட குழந்தை மட்டும் இறந்து விட்டதாக்கும்!" என்றார் பொன்னம்பலம்.

இந்தக் கதையைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டு சில வினாடிகள் எல்லாரும் மௌனமாக உட்கார்ந்திருந்தோம். அப்புறம் சுவாமிநாதன் சொன்னார்.

"இதே மாதிரி நம் ஊரிலும் ஒரு கதையுண்டு. அது உங்களில் யாருக்கும் தெரியாதுபோலிருக்கிறது. இந்தக் கதையை என் சிறுவயதில் நான் என் தாத்தா மடியில் உட்கார்ந்து கேட்டதாக ஞாபகம். வீடு திரும்ப இன்னும் சற்று நேரம் ஆகலாமானால் சொல்லுகிறேன்."

சுவாமிநாதனுக்குத் தான் கதை சொல்லுவதில் நிபுணன் என்ற அகாரணமான நம்பிக்கை உண்டென்பது எங்கள் எல்லோருக்கும் தெரியும். மணியும் கிட்டத்தட்ட எட்டியிருக்கும் போலிருந்தது. இருந்தாலும் கதை என்றால் விடலாமா?

"நாழிதான் ஆகிவிட்டது. இருந்தாலும் சொல்லும் கேட்கலாம். ஆனால் சற்றுச் சுருக்கமாகவே சொல்லும்..." என்றேன்.

●

கலாமோகினி

1941